**Copy of Deposition of Cross examination of PW1**

**முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

O.S. No. 64 / 2016

2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 14-ம் தேதி வா.சா.1 என்பவரை சாட்சியாக 54-வது சட்டத்திலுள்ள பிரிவு 7-ன்படி திருமதி ஆ.சாந்தி,B.Sc.,B.L., முதலாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | துரைசாமி | சமயம் | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | | |

**சாட்சி இன்று ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது சொந்த ஊர் முத்தம்பாளையம். 1989 வருடத்திற்கு பிறகு சேனாபதிபாளையத்தில் குடியிருக்கிறேன். எனக்கு தொழில் விவசாயம் மற்றும் நெல் மற்றும் கடலை காய்களை மில்களுக்கு வாங்கி கொடுப்பேன். எனக்கு சொந்தமாக பூமி இல்லை. குத்தகைபிடித்து தான் விவசாயம் செய்து வருகிறேன். நிரந்தரமாக குத்தகை பிடிப்பதில்லை பருவகாலத்தில் குத்தகை பிடிப்பேன். நான் குத்தகை பிடித்து விவசாயம் செய்வதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. மில்களுக்கு நெல் மற்றும் கடலைகாய்களை வாங்கி கொடுத்து கமிசன் பெறுவதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. நான் IOB வங்கி ஈரோடு கலை கல்லூரி கிளையில் கணக்கு வைத்துள்ளேன். நான் சுமார் 10 வருட காலம் அந்த வங்கி திறக்கப்பட்ட காலத்தில் இருந்து கணக்கு வைத்துள்ளேன். நான் பிரதிவாதி இளையம்மாளுக்கு கடன் கொடுக்கவில்லை. கடன் கொடுக்கும் போது அவரும் இல்லை என்றால் சரிதான் அவருக்கு தெரியும். இளையம்மாள் மகன் ஈஸ்வரமூர்த்தி காருக்கு கேஸ்கிட் போடும் வேலை செய்து வந்தார் மற்றும் இரு சக்கர வாகனங்களுக்கு Speedo Meter மாட்டும் வேலை செய்து வந்தார். இளையம்மாள் மகன் ஈஸ்வரமூர்த்தி கம்பெனிக்காக என்னிடம் கடன் கேட்டார்.

12 லட்சம் தொகை கேட்டார். அவர் எனக்கு சொந்தகாரர் மற்றும் தெரிந்தவர். அவர் தான் என்னிடம் பணம் வாங்கி போனார் வேறு யாரும் வரவில்லை. நான் பணம் கொடுக்கும் போது நானும் அவரும் மட்டும் தான் இருந்தோம் வேறு யாரும் இல்லை. பணம் 2 தவணையாக கொடுத்தேன் 2 தவணையிலும் அதேபோல் நாங்கள் இருவர் தான் இருந்தோம் வேறு யாரும் இல்லை. எனக்கு 2 தவணையாக பணம் வந்தது அதனால் 2 தவணையாக கொடுத்தேன். பணம் எனக்கு கமிசனாக வந்தது. அவ்வாறு 12 லட்சம் ரூபாய் பணம் கமிசனாக எந்தெந்த தேதியில் யாரிடம் இருந்து வந்தது என்பதை காட்ட ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். நான் அந்த பணத்தை வங்கியில் போட்டு வைத்திருந்து எடுக்கவில்லை. பணத்திற்கு 1 ரூபாய் வட்டி. அவ்வாறு வட்டி தர ஒப்புக்கொண்டதை காட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை. ஈஸ்வரமூர்த்தி 3 மாதம் வட்டி கொடுத்தார் அதை காட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை. ஈஸ்வரமூர்த்தி யூனியன் வங்கி சத்தி ரோடு கிளையில் வங்கி கணக்கு வைத்திருந்தார். அந்த வங்கியில் ஈஸ்வரமூர்த்தி கடன் பெற்றிருந்தாரா என்று தெரியாது. அந்த வங்கியில் ஈஸ்வரமூர்த்தி Cash Credit வங்கி கணக்கு வைத்திருந்தாரா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 மற்றும் 3 காசோலைகளை ஈஸ்வரமூர்த்தி எழுதி கொடுத்தாரா என்றால் காசோலையில் கையெழுத்து மற்றும் Account Payee ஆகிய இரண்டையும் என் முன்பு நிரப்பி கொடுத்தார். இரண்டு காசோலைகளையும் ஒரே தேதியில் கொடுத்தாரா என்றால் இல்லை ஜுன் 1 2015 ம் தேதியில் ஒரு காசோலை கொடுத்தார் 15 நாட்கள் கழித்து மற்றொரு காசோலை கொடுத்தார். காட்டப்படும் வா.சா.ஆ.1 மற்றும் 3 காசோலைகளில் தேதி பெயர் தொகை எழுத்தாலும் எண்ணாலும் எழுதியது யார் என்றால் எனக்கு தெரியாது ஏற்கனவே எழுதி கொண்டு வந்திருந்தார். கையெழுத்து மற்றும் Account Payee விவரங்கள் கருப்பு மையில் உள்ளது என்றால் சரிதான். இரண்டும் ஒரே பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெயர் தொகை எண்ணாலும் எழுத்தாலும் இரண்டு காசோலைகளிலும் ஒரே பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு காசோலைகளிலும் தேதிகள் ஒரே பேனாவால்

எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது ஏற்கனவே ஈஸ்வரமூர்த்தி எழுதி கொண்டு வந்திருந்தார். ஈஸ்வரமூர்த்தி வியாபாரத்தில் 50 , 60 ஆட்கள் வைத்து நல்ல turnover செய்து வந்தார் என்றால் சரிதான். அதனால் பொருட்களுக்காக பணம் தரவேண்டியவர்களுக்கு தினமும் காசோலை கொடுத்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1. மற்றும் 3 காசோலைகள் அடுத்தடுத்த எண் உள்ளது என்றால் சரிதான். ஒருவர் இறந்துவிட்டாலே அந்த நபரின் பெயரில் உள்ள வங்கி கணக்கில் பணம் போடவோ எடுக்கவோ முடியாது என்றால் சரிதான். எனக்கு ஈஸ்வரமூர்த்தி இறந்து விட்டார் என்பது அவர் இறந்த அன்றே தெரியும். அதற்கு பிறகு சென்று அவர் வங்கி கணக்கில் பணம் உள்ளதா என்று பார்த்தேனா என்றால் இல்லை இறந்தவர் வீட்டில் பைசல் பேசினேன். ஒப்பந்தம் எதுவும் ஆகவில்லை. பணம் தருகிறேன் என்று சொன்னார்கள் இதுவரை தரவில்லை. இளையம்மாள் படிப்பறிவு இல்லாதவர் என்றும் கைரேகை தான் வைப்பார் என்றும் சொன்னால் சரிதான். ஈஸ்வரமூர்த்தியின் வாரிசு இளையம்மாள் மட்டும் தான் வேறு யாரும் இல்லை. ஈஸ்வரமூர்த்தி இறந்தபின்னிட்டு இந்த வழக்கு காசோலைகளை வசூலுக்கு போடவேண்டிய அவசியம் என்ன என்றால் ஈஸ்வரமூர்த்தியின் தரப்பில் யாரும் பணம் தரவில்லை பைசூலுக்கும் ஒத்துவரவில்லை அதனால் காசோலையை வசூலுக்கு போட்டேன். ஈஸ்வரமூர்த்தி உயிருடன் இருந்தபோதே அவருக்கும் இளையம்மாளுக்கும் வழக்குகள் நிலுவையில் இருந்ததாக சொன்னார்கள் என்ன வழக்கு என்று தெரியாது. இளையம்மாளுக்கும் அவரது கணவருக்கும் சண்டை என்றும் போக்குவரத்து இல்லை என்றும் சொன்னால் போய் வந்துகொண்டுதான் இருக்கிறார்கள் வழக்கில் இவ்வாறு சொல்கிறார்கள். இளையம்மாளுக்கும் அவரது கணவர் விஸ்வநாதனுக்கும் சொத்து சம்பந்தமாக இளையம்மாள் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் உள்ளதா என்று எனக்கு தெரியாது. விஸ்வநாதனுக்கும் எனக்கும் சுமுகமான உறவு மற்றும் பேச்சுவார்த்தை இல்லை. வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் இறந்து போன ஈஸ்வரமூர்த்தி சொல்லி தெரியும் மற்றும் பக்கத்து வீடு என்பதால் சொல்லி தெரிந்துகொண்டேன். நான் தாவாவில்

சொல்லியுள்ள சொத்து விவரத்தின் மொத்த மதிப்பு எவ்வளவு என்றால் சுமாராக அன்றைய கால கட்டத்தில் 4 அல்லது 5 லட்சம் ரூபாய் இருக்கும் தற்போது அதை விட அதிகமாக இருக்கும். இளையம்மாள் தாக்கல் செய்திருந்த எதிர்வாதத்தில் உள்ள விவரங்களை தெரிந்துகொண்டேன். எதிர்வாதத்தில் இளையம்மாள் தாவா சொத்தின் அரசாங்க மதிப்பே ரூபாய் 3,66,98,566/- என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதை நான் பதிவாளர் அலுவலகத்தில் சென்று சரிபார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. ஈஸ்வரமூர்த்தி வங்கியிலேயே Cash Credit பெற்று தனது தொழில் வங்கி கடன் மூலம் செய்து வந்தார் என்றும் ஈஸ்வரமூர்த்தி என்னிடம் கடன் பெற வேண்டிய அவசியம் இல்லை அவ்வாறு கடனும் பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு 12 லட்சம் ரூபாய் கடன் கொடுக்ககூடிய அளவிற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. நான் ஈஸ்வரமூர்த்திற்கு தாவா கடனை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இளையம்மாளுக்கும் விஸ்வநாதனுக்கும் உள்ள பிரச்சனையில் ஈஸ்வரமூர்த்தி இறந்ததற்கு பின்னிட்டு அவரது அலுவலகத்தில் வைத்திருந்த காசோலையை எடுத்து பின்னிட்டு நான் பூர்த்தி செய்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா காசோலைகளில் உள்ள கையொப்பம் ஈஸ்வரமூர்த்தி உடையதே அல்ல என்றால் சரியல்ல. தாவாவில் 'E' செட்டியூலில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் ஈஸ்வரமூர்த்தி உடையது அல்ல என்றும் அது இளையம்மாளுடையது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் சூத்திரதாரி விஸ்வநாதன் தான் என்றும் இளையம்மாளை அலைய வைத்து அக்கிர லாபம் அடையவேண்டும் என்பதற்காக என் மூலம் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஈஸ்வரமூர்த்தி இறந்ததற்கு பின்னிட்டு பைசல் நடந்தது என்றும் தாவா காசோலைகளை வசூலுக்கு போடுமாறு இளையம்மாள் சொன்னார் என்றும் என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் வழக்கிற்காக பொய்யான விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இளையம்மாள் தொகையை திருப்பி கொடுத்துவிடுவதாக சொன்னதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலைகளுக்காக பிரதிவாதி எனக்கு எந்த

தொகையும் செலுத்தவேண்டியதில்லை என்றும் வட்டி எதுவும் செலுத்தவேண்டியதில்லை என்றும் தாவா பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நானும் விஸ்வநாதனும் சேர்ந்து கொண்டு இளையம்மாளிடம் இருந்து அக்கிரமாக பணம் பறிக்கவேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்தோம் என்றும் அதற்காகத்தான் இளையம்மாளின் அனைத்து சொத்து விவரங்களையும் சொல்லி அவரை முடக்குவதற்காக முயற்சி செய்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு காசோலையை போலியாக கையெழுத்து போட்டு தயாரித்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த தாவா தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.